DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.44/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 05- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | 2-ம் நிலைக்காவலர் 820 |
| பெயர் | - | சதீஸ்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஸ்ரீராமலூா | சமயம் | - | |
| கிராமம் | - | முடீஸ் காவல் நிலையம் | வயது | - | 33/2026 |
| சாதி | - | | | | |

**05-03-2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது முடீஸ் காவல் நிலையத்தில் 2-ம்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.09.2025-ம் தேதி மதியம் சுமார் 13.10 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் அயல் பணியாக பணிபுரிந்த போது, நானும், தலைமைக்காவலர் 1484 திரு.வேணுகோபால் மற்றும் நிலைய உதவி ஆய்வாளர் திரு.சுதாகரன் ஆகியோர் ஷேக்கல்முடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சோலையார் டேம், சேடல் டேம் மற்றும் உருளிக்கல் ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு மற்றும் சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி உருளிக்கல் சின்னக்கடை பஸ் ஸ்டாப் அருகில் கண்காணித்தபோது அங்கு கையில் பையுடன் நின்றுகொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் மணிகண்டன் (வயது 30), த/பெ.வெள்ளமுத்து , 3/73 கிழக்கு தெரு, ஓலைபாடி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம் எனக் கூறி தனது பையில் வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுகொண்ட Express brandy என லேபிள் ஒட்டப்பட்ட 07 பாட்டில்களை ஆஜர்படுத்தி விசாரிக்க தான் சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்பு 14.30 மணிக்கு உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய பொருள்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆககுறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரி மற்றும் தடய பொருட்களை 14.15 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 22/2025, ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்க உதவியாக இருந்தோம். பின்னர் வழக்கு சொத்தினை 15.15 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலைய பின்புறம்

வைத்து எங்கள் முன்பாக கீழே கொட்டி அழிக்கப்பட்டு அழித்தல் மகஜர் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் **(அந்த அழித்தல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆககுறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. சம்பவயிடமான சின்னக்கடை பஸ் ஸ்டாப் என்பது உருளிக்கல் எஸ்டேட்டில் உள்ளதா உளிக்கல் பெரியார் நகரில் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. சின்னக்கடை பஸ் ஸ்டாப் இருபுறமும் குடியிருப்புகளும், அதன் எதிர் புறம் ஒரு கடையும் இருந்தது என்றால் சரிதான். அந்த கடைக்காரர் மூக்கையன் என்பவர் எப்போதும் அந்த கடையில் இருப்பார் என்றால் அவரை பார்த்தது இல்லை. சம்பவ நேரம் பகல் நேரம் என்றால் சரிதான். நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்தால் அங்கு குடியிருப்புகளில் இருந்தவர்களுக்கும், கடையில் இருந்தவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்றால் தெரிந்திருக்கும். எதிரி எந்த நிற பை வைத்திருந்தார் என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பையை உதவி ஆய்வாளர் கைப்பற்றவில்லை என்றால் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் பையுடன் வழக்கு சொத்தை கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. பையை என்ன செய்தீர்கள் என்றால் சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். அரசு மதுபானத்தை வைத்திருந்த குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3-ம் நபருக்கு எதிரி மது பானத்தை விறப்னை செய்யும் போது கையும், கலவுமாக பிடித்தோமா என்றால் இல்லை. எதிரியிடம் விற்பனை செய்து வைத்திருந்ததாக பணம் எதுவும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி மீது தனி நபர் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தை வைத்திருந்ததாக துணிப்பை என்ன நிறப்பை என்றும் அதை கைப்பற்றியதாகவும் போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அரசு மதுபானத்தை வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் டாஸ்மாக் கடையில் வாங்கியவை என்றால் சரிதான். எந்த அரசு கடையில் வாங்கினார் என்பதை விசாரித்து அரசு மதுபானக்கடையில் உள்ளவர்களை சாட்சியாக இவ்வழக்கில் முன்னிடவில்லை என்றால் சரிதான். டாஸ்மாக் கடையில் ஒரு நபருக்கு எவ்வளவு விற்கவேண்டும் என்று அளவீடு உள்ளதா என்றால் தெரியவில்லை. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களில் மொத்த அளவான 1.200 லிட்டர் என்பது டாஸ்மாக் கடையில் ஒரு தனி நபருக்கு விற்கக்கூடிய அனுமதிக்கப்பட்ட அளவு என்றால் சரிதான். அரசு ஆணைப்படி ஒரு தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்கு 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். நான் வால்பாறை காவல் நிலையத்தில் இருந்து ஷேக்கல்முடி காவல் நிலையத்திற்கு மாறுதல் ஆகி செல்லும் போது ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் ஒரு போலீசாரும், சார்பு ஆய்வாளரும் இருந்தார்கள். நான் ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 7 வழக்குகளில் நான் சாட்சியாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்பதாலும், எதிரியிடம் இருந்து ஏந்த பொருளும் கைப்பற்றவில்லை என்பதாலும் தான் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பொது மக்களை சாட்சியாக அழைத்தும் வர மறுத்துவிட்டார்கள். பொதுமக்களை யார் யார் சாட்சியாக அழைத்தீர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யயவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே வழக்கு சம்பவம் நிகழ்ந்திருந்தால் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்திருப்போம் என்றாலும், சம்பவயிடம் பற்றிய விவரத்தை நான் சரியாக சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக உயர் அதிகாரி பதிவு செய்த வழக்கிறிக்கு வலுவூட்ட நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.